திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனை.

*3112—திரு. வி.பி. இராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராசபாளையத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இல்லை,

திரு. வி. பி. இராசன்: மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களே, மதுரைக்கும், நாகர்கோவிலுக்கும், செங்கோட்டைக்கும், மதுரைக்கும் இடையில் பணிமனை இல்லாத காரணத்தால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அடிக்கடி பழுதடைந்து ஆங்காங்கே ரோடுகளில் நிற்பதைப் பார்க்கும்போது நமக்கே பரிதாபமாக இருக்கிறது. ஆகவே மதுரைக்கும், செங்கோட்டைக்கும் இடையில் ராஜபாளையத்தில் ஒரு பணிமனை இருந்தால், அந்தப் பேருந்துகள் சீராகச் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே இனிமேலாவது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணை காட்டி, எங்கள் ஊரில் ஒரு பணிமனை அமைப்பதற்கு உதவி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் பணிமனை அமைக்கவேண்டுமென்றால், குறைந்தபட்சம் 30 பேருந்துகளாவது குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்பட்டுச் செல்வது, அல்லது வந்து அடைவது என்ற நிலைமை இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அங்கே பணிமனைகளை அமைப்பதற்கு ஏற்ற அளவிற்கு வேலைகள் இருக்கின்ற காரணத்தால், ஏற்கனவே உள்ள வரையறையின்படி 30 பேருந்துகளாவது புறப்படவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே ராஜபாளையத்தில் தற்போது அமைப்பதற்கு இயலாத சூழ்நிலை உள்ளது.

ஓட்டுநர் உரிமத்தில் இரத்தப் பிரிவுக் குறிப்பினைப் பதிவு செய்தல்.

*6196—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாகன ஓட்டுநர்கள் போன்ற விபத்துக்குள்ளாகும் தொழில் புரிபவர்கள் தங்களின் இரத்தப் பிரிவு (Blood Group) பற்றிய குறிப்பினை ஓட்டுநர் உரிமம் (Driving Licence) போன்ற முக்கிய ரிக்கார்டுகளில் கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஓட்டுநர் உரிமத்தில் வாகன ஓட்டுநரின் இரத்தப்பிரிவை கட்டாயம் உரிமத்தில் பதிவு செய்யவேண்டும் என்ற திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை, இருந்தாலும் 1989-ம் வருட (திருத்தம் செய்யப்பட்ட) மத்திய மோட்டார் வாகன விதி 5-ல் படிவம் 1-ஏயில், 28-10-1989 தேதி முதல் ஓட்டுநர்கள் விரும்பினால் மட்டும் அவர்களின் இரத்தப் பிரிவு மற்றும் ஆர்.எச். (R.H.) விபரமும் உரிமத்தின் குறிப்பிட வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலத்தில் சாலை விபத்துக்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. அதனால் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. அப்படிப் பட்ட விபத்துக்களில் சிக்கிக்கொண்டவர்களுக்கு ரத்தம் உடனடியாகச் செலுத்தாவிட்டால், அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற முடியாத நிலையிருக்கிறது. பொதுவாக ஓட்டுநர்களுக்கு விபத்து ஏற்படக்கூடிய காரணத்தால், அவர்களுடைய டிரைவிங் லைசென்சில் அவர்களுடைய பிளட் குரூப்பைப் பற்றிய விவரம் இருந்தால்தான், அதற்கேற்ற குரூப்பைக் கொடுக்க முடியும். அந்த அடிப்படையில் இதைக் கட்டாயமாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விரும்பினால் மட்டும் இரத்த பிரிவு உரிமத்திலே பதிவு செய்யவேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. இதனுடைய நிலைமை கருதி அவசியம் பதிவு செய்ய வேண்டும் என்று மாற்றி அமைக்க வேண்டுமானால் மத்திய அரசுக்கு தேவையான சட்ட திருத்தம் செய்வதற்கு அரசு பரிந்துரை செய்யும்.

திரு. சி. கோவிந்தராஜன்: அப்படி அரசு பரிந்துரை செய்யும் போது குறிப்பாக சென்னையிலிருந்து திருச்சி டிரங் ரோட்டில் ஏராளமான விபத்துக்கள் உயிர்ச்சேதங்கள் ஏற்படக்கூடிய விபத்துக்கள் ஏற்படுகின்றன. பிளட் டிரான்ஸ்பியூஷன் பண்ணுவதற்கு இடங்கள் கிடையாது. எனவே அப்படிபட்ட சமயங்களில் பிளட் பாங்க் இருக்கக்கூடிய பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான் செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதினால் அத்தகைய ரோடுகளில் பல இடங்களில் பிளட் பாங்க் அமைக்க வேண்டி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே அது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய சென்னை நாகர்கோவில் நெடுஞ்சாலையில் ஏராளமான விபத்துக்கள் தினசரி நடந்து கொண்டிருக்கின்றன

1990 மார்ச் 19]

பெரும்பாலும் இந்த விபத்துக்களில் ஏதோ ஒரு வாகனத்தை ஓட்டுநர் மதுவின் பிடியில் இருப்பதால் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே நெடுஞ்சாலையில் ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் மது அருந்தியுள்ளார்களா என்பதை சோதித்து அதை தடுப்பதற்கான நடவடிக்கை அரசின் சார்பில் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே தற்போது காவல் துறையினர் அப்படிப்பட்ட சோதனைகளை ஆங்காங்கே செய்து கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் விபத்தின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் அல்லது தடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் அந்த சோதனைகள் தீவிரப்படுத்தப்படும்.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டுநர் உரிமம் வழங்குவதில் இப்பொழுதெல்லாம் ஓட்டுநர் பயிற்சி பெற்றவர்கள் அந்த இன்ஸ்பெக்டர்களிடம் செல்லாமலேயே ஏஜென்ட் மூலமாக ஒரு ஊரில் இருந்து கொண்டே 100, 200 படிவங்களை வைத்துக்கொண்டு அதற்குரிய சம்பளம் பெற்ற அலுவலர்களை வைத்துக்கொண்டு பெறுகிறார்கள். இதன் காரணமாக என்ன என்ன குற்றங்கள் நடக்கின்றன என்றால் ஒரு நபரே பல உரிமங்களைப் பெற்று வைத்துக்கொண்டு தவறான வழியில் உபயோகிக்கிறார். இரண்டாவதாக அந்த நபர் அந்த இடத்திலேயே இருக்கிறாரா என்பது தெரியவில்லை..... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா விலகிச்செல்கிறது.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி: உரிமம் வழங்கும் வகையில் அந்த சீர்த்திருத்தம் செய்து இவ்வாறான தவறுகள் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது எந்த ஆர்.டி.ஓ அலுவலகங்களிலும் நடைபெறாமல் தடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். தற்போது அந்த சம்பந்தப்பட்ட அலுவலர்க்கு கட்டாயம் ஓட்டிக் காண்பித்த பிறகுதான் அந்த ஓட்டத்தில் தேர்வு பெற்றிருந்தால் மட்டுமே லைசன்ஸ்கள் வழங்கப்படுகின்றன. எங்கெங்கே தவறுகள் நடக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவிக்க வேண்டும் என்பது இல்லை. இரகசியமாக தெரிவித்தால் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்று சோதனையிட்டு அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 3331-பி மற்றும் 5929 ஆகியவை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.